www.tamilarangam.net



# தமிழர்களை பூண்டோடு அழிக்க புதிய திட்டம்!

## தமிழர் பகுதிக்கு சிங்கள வெறியனை மந்திரியாக நியமித்தார்!!

**கொழும்பு, மார்ச். 24— இலங்கையில் தமிழர்களை பூண்டோடு ஒழித்துக்கட்ட ஜெயவர்த்தன புதிய நடவடிக்கை எடுத்து உள்ளார். இதற்காக தனி இலாகா ஏற்படுத்தி சிங்கள வெறியரை மந்திரியாக நியமித்தார். இவர் தமிழர் பகுதியில் அரசு நிர்வாகம் மற்றும் ராணுவ பாதுகாப்புக்கு பொறுப்பு ஏற்பார்.**

இலங்கையில் தமிழர் பகுதியில் மீண்டும் கலவரம் உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டு உள்ளது அல்லவா?


தமிழ் விடுதலை புலிகளை ஒழித்தே தீருவேன் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன அறிவித்ததைத் தொடர்ந்து தமிழர் பகுதியில் ஏராளமான ராணுவம் குவிக்கப்பட்டது. வட்டமேஜை மாநாடு திடீரென்று ஒத்தி வைக்கப்பட்டு நெருக்கடி நிலை நீக்கப்பட்டது.

### மீண்டும் கலவரம்

தமிழர் பகுதியில் நிர்வாக பொறுப்பு ராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. ராணுவ வீரர்கள் வீடு வீடாக சென்று தமிழ் இளைஞர்களை வேட்டையாடினார்கள். இதை தொடர்ந்து 2 ராணுவ அதிகாரிகள் சுட்டு கொல்லப்பட்டனர். இதனால் தமிழர் பகுதியில் மேலும் பதட்டநிலை உருவானது. தமிழர் கடைகளுக்கு ராணுவம் தீ வைத்தது. பஸ்கள் ஓடவில்லை. கடந்த ஆண்டை போல் மீண்டும் பயங்கர கலவரம் ஏற்படும் சூழ்நிலை உருவானது.

### புதிய மந்திரி

இந்த நிலையில் தமிழர்கள் போராட்டத்தை ஒடுக்க இலங்கை அரசு புதிய நடவடிக்கை எடுத்து உள்ளது.



ஜெயவர்த்தன

இதற்காக தேசிய பாதுகாப்பு அமைச்சகம் என்ற புதிய இலாகாவை அமைக்கிறது. தமிழர்கள் வாழும் இலங்கையின் வடக்கு பகுதியிலும், கிழக்கு பகுதியிலும் நடைபெறும் ஆட்சி நிர்வாகத்தையும் ராணுவ நிர்வாகத்தையும் இந்த அமைச்சகம் கவனிக்கும். லலித் அதுலத் முதலி என்ற மூத்த மந்திரி இந்த இலாகாவை கவனிப்பார்.

### அறிவிப்பு

இவருக்கு தமிழர் பகுதியில் ராணுவத்தை நிர்வகிக்கும் முழு பொறுப்பு அளிக்கப்படும். அதை பயன்படுத்தி தமிழ் விடுதலைப்புலிகளின் போராட்டத்தை அடக்க அரசு திட்டமிட்டு உள்ளது. புதிய [illegible]

நியமனம் குறித்து நேற்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

### பாராளுமன்றத்தில் பிரதமர் மிரட்டல்

நேற்று முன் தினம் (வியாழக்கிழமை) இலங்கை பாராளுமன்றத்தில் பேசிய பிரதமர் பிரேமதாசா இந்தியா மீது சரமாரி குற்றச்சாட்டை சுமத்தினார்.. அவர் கூறியதாவது:—

இலங்கை தமிழ் தீவிரவாதிகளுக்கு தென் இந்தியாவில் உள்ள முகாம்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். இது பற்றி இந்தியா மறுப்பு தெரிவித்து உறுதி மொழிகள் அளித்து உள்ள போதிலும் அதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

### பண்டாரநாயக மகள் மறுப்பு

பிரதமர் பிரேமதாசாவின் குற்றச்சாட்டை மறுத்து முன்னாள் பிரதமர் திருமதி பண்டாரநாயகாவின் மகளும் எதிர்க்கட்சி தலைவருமான அனுரா பண்டாரநாயகா பேசினார்.

அவர் பேசியதாவது:—

இலங்கை தமிழர் பிரச்சினையில் பிரதமர் இந்திராவின் உறுதிமொழியை நான் சந்தேகப்படவில்லை. அவருடைய சொந்த பிரச்சினைகளுக்கு நடுவிலும் இலங்கை பிரச்சினைக்கு தீர்வு காண விரும்பினார். அவரை ஏன் நீங்கள் நம்பக்கூடாது

### நம்பிக்கை

முதலில் எங்கள் சுதந்திரா கட்சி கூட இந்திராவின் தலையீட்டை சந்தேகத்துடன் பார்த்தது. ஆனால் அவருடைய தூதர் பார்த்தசாரதியின் முயற்சிக்கு பிறகு நம்பிக்கை [illegible]

இந்தியா — இலங்கைக்கு இடையே உள்ள நல்லுறவுக்கு தடை போடாதீர்கள். தென் இந்தியாவில் தமிழ் விடுதலைப் புலிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கப் படுவதாக கூறுகிறீர்கள். இங்கே உங்களால் தடை செய்யப்பட்ட இடதுசாரி கட்சி தலைவர்களைக் கைதுசெய்ய முடியவில்லை. வங்கி கொள்ளையர்களைப் பிடிக்க முடியவில்லை. ஏன் நடு நிலை நாடுகளின் தலைவராக இருக்கும் இந்திராவை சந்தேகிக்கிறீர்கள்.

### சந்தேகம் இருந்தால்...

தென் இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்கு பயிற்சி கொடுப்பதாக இந்த அரசுக்கு சந்தேகம் இருந்தால் இந்திய அரசின் ஒத்துழைப்போடு அதற்கு தீர்வு காணுங்கள். அதை விட்டு ஆதாரமில்லாத குற்றச்சாட்டை கூறுகிறீர்கள். இது குறித்து பேச டெல்லிக்கு ஒரு மந்திரியை அனுப்புங்கள்.

இவ்வாறு அவர் பேசினார்

## Police station raided in Sri Lanka: 3 killed

COLOMBO, March 25.

Alleged Tamil terrorists stormed a police station at Point Pedro in Northern Sri Lanka and shot dead three police personnel this evening, official reports received here said.

The incident took place barely half-an-hour after the new National Security Minister, Mr. Lalith Athulathmudali, had visited Jaffna and discussed the security situation with senior military and police officials in the area. He had also visited an army camp and the Jaffna police station.

The reports said the terrorists timed their attack when there was change of duty at the police station. The victims, who were shot dead at point-blank range, were a sergeant and two constables.

Unconfirmed reports said two pedestrians passing by the police station were killed UNI

லண்டன் தமிழ் மன்றம்
LONDON TAMIL MANRAM
51 Selborne Gardens
Hendon, London, NW4 4SH
Tel: 01-202 7190



தமிழ்த்தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Move to sabotage amity talks?

# New Delhi hurt by Premadasa's tirade

From G. K. Reddy

NEW DELHI, March 23.

The Government of India is taking a serious view of the orchestrated anti-Indian campaign unleashed in Sri Lanka by no less a person than its Prime Minister, Mr. R. Premadasa, a known hard-liner who is evidently bent on creating another crisis to compel the island's President, Mr. J. R. Jayewardene, to call off the current efforts to arrive at a negotiated settlement of the Tamil problem.

After Mr. Premadasa had made some grave allegations in the Sri Lanka Parliament yesterday, presumably for domestic consumption, about the alleged training of Tamil terrorists in South India, the Sri Lanka Foreign Minister, Mr. A. C. S. Hameed, called the Indian High Commissioner, Mr. S. J. S. Chhatwal, to voice his Government's concern.

But the Indian High Commissioner, who strongly rebutted the allegation, has not informed the Government of India that Mr. Hameed had demanded a joint investigation by the two countries into reports of training being given to the Sri Lankan Tamil "Tigers" in secret camps located in Tamil Nadu, as he said later in Parliament. The Sri Lanka Government has no independent information about the existence of such camps, the nature of training being given to these Tamil "Tigers" or the kind of arms supplied to them, since Mr. Premadasa's allegations are based entirely on an Indian news magazine report.

## Bogey of interference

The Government of India had some information about a week ago that Mr. Premadasa and his close associates in the Sri Lanka Government were bent on precipitating a new crisis by raising the bogey of increasing Indian interference to compel Mr. Jayewardene to call off the roundtable talks and halt the present conciliation process through an abrupt suspension of the discussions. The Indian leaders were no less concerned about reports of renewed ethnic violence in the island which could not be attributed entirely to the alleged militancy of the Tamil extremists, since the Sri Lankan armed forces were equally responsible for the recent incidents.

Mr. Chhatwal was called to Delhi for urgent consultations and he went back to Colombo with a special message urging Mr. Jayewardene not to call off the roundtable talks, since it would amount to abandoning the very idea of a negotiated settlement. It was on the basis of this well-meaning Indian advice that Mr. Jayewardene decided to merely adjourn the conference till May 9 and keep the door open for resumption of the dialogue soon.

## Jayewardene's dilemma

The alleged training of Tamil terrorists in India is being used by the Buddhists and other Sinhala militants as a convenient political excuse to sabotage the roundtable talks on regional autonomy as the only sensible way to settling the island's ethnic problem. Mr. Jayewardene himself has become a prisoner of his own predilections, wavering pathetically between his own earnest desire for a reasonable settlement and his understandable reluctance not to displease the hard-liners like Mr. Premadasa beyond a point for fear of undermining his own political position.

The best that India could do in these circumstances is to keep on using its good offices to urge patience on the part of the TULF (Tamil United Liberation Front) leaders, while advising the Sinhala leaders to display greater tolerance. If Mr. Jayewardene himself has not yielded to the counsels of despair and called off the roundtable talks, it is largely because of the friendly influence that India has been exerting behind the scenes.

It is for this reason that the Government of India has been deeply hurt by the highly irresponsible and provocative charges levelled by Mr. Premadasa to justify his own rigid approach to Sri Lanka's ethnic problems. He is being egged on by some other Ministers in Mr. Jayewardene's Cabinet to use the alleged training of Tamil "Tigers" in Indian camps as an excuse for blocking the negotiations.

## No over-reaction

If India has not officially protested against these baseless allegations, it is because the Government is keen on using the current recess to get the Sinhala and Tamil leaders to take a dispassionate look at the new dangers and create a better climate for the resumption of the interrupted talks in a calmer atmosphere. It was for this reason that the official spokesman's denial yesterday of the Sri Lankan charges was couched in carefully worded language to avoid unnecessary offence to Mr. Premadasa, while making it perfectly clear to all concerned that India wants to secure justice to the Tamil community through a lasting political settlement and not by encouraging terrorism whatever the nature of provocation.

Premadasa soft-pedals: Page 9

# இலங்கையில் ஓடும் பஸ்ஸில் 2 விமானப் படை வீரர்கள் கொலை

தினமணி 21/3/84

கொழும்பு, மார்ச். 20— இலங்கை தமிழ் தீவிரவாதிகள் இன்று பிற்பகல் இலங்கை விமான படையினர் இருவரை கொலை செய்ததாக ஊர்ஜிதம் ஆகாத செய்திகள் கூறுகின்றன இதனால் யாழ்பாணம் நகரில் புதிய பதட்டநிலை தோன்றியுள்ளது.

இந்த இரு விமானபடையினரும் சாதாரண உடையில் பஸ் ஒன்றில் பயணம் செய்து கொண்டு இருந்த போது கொண்டாவில் என்ற இடத்திற்கு அருகே துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களிடம் விமானபடை அடையாள கார்டுகள் இருந்தன. இந்த சம்பவத்தை கண்ட மற்ற பயணிகள் பஸ்ஸில் இருந்து ஓடிவிட்டனர்.

தமிழர்கள் பிரச்னைக்கு ஒரு அரசியல் தீர்வு காணுவதற்கான அனைத்து கட்சிகள் அமைதி மகாநாட்டின் கூட்டம் ஆரம்பிப்பதற்கு சில மணி நேரம் இருந்த போது இந்த சம்பவம் பற்றிய செய்திகள் வந்தன.

இந்த செய்தி பரவியதும் கடைகாரர்கள் ஒரே நாளில் இரண்டாம் முறையாக கடைகளை அவசரமாக மூடினர். முன்னதாக ஆயுதம் ஏந்திய 15இளைஞர்கள் ஒரு பாங்கின் தோட்டாக்கள் துளைக்க முடியாத வேன் ஒன்றின் மீது கைகுண்டுகளை வீசி வழிமறித்தனர். வேனில் இருந்த காவலர்களும் இந்த இளைஞர்களும், ஒருவருக்கொருவர் சுட்டுக்கொண்டனர். ஆனாலும் இந்த கொள்ளை முயற்சி தோல்வியுற்றது.

இச் செய்திகளை வெளியிடுவோர்
51. SELBORNE GDN
HENDON
LONDON NW4
லண்டன் தமிழ் மன்றம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்